## இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

## MCOP No. 15/2016

**ம.சா.1**

**திருமதி. சுஜாதா**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்தானது ஆண்டிபட்டி பங்களா மதுரை- திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் நான்குவழி சாலையில் நடந்தது என்றால் சரிதான். மேற்படி ரோடானது கிழமேல் ரோடு. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் பார்த்தேன். காவல்நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம் என் கணவர் தான் கொடுத்தார். புகாரில் ரோட்டின் வடபுறமாக என் கணவர் முனியாண்டி விலாஸ் என்ற ஓட்டல் நோக்கி நடத்தி வந்து விபத்து தேதியில் வடக்கேயிருந்து தெற்கு நோக்கி நடந்து சென்ற சமயத்தில் இடதுபுறமாக நின்றுகொண்டிருந்தபோது விபத்து நடந்ததாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனம் அவரது சரியான பாதையில் இடதுபுறமாக சென்றார் என்றும், என் கணவர் தான் வாகனம் வருவதை பார்க்காமல் திடீரென்று ரோட்டை குறுக்காக கடந்தார் அதனால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவரின் கவனக்குறைவு தான் காரணம்

என்றும், மோட்டார் சைக்கிளின் ஓட்டுநர் காரணமல்ல என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு என் கணவர் வாடிப்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார். அதன்பின்னிட்டு மதுரை ப்ரீத்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். வேறு மருத்துவமனையில் சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரிதான். வாடிப்பட்டி அரசு மருத்துவமனையில் ஒருநாள்தான் சிகிச்சையில் இருந்தார். மதுரை ப்ரீத்தி மருத்துவமனையில் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை சிகிச்சையில் இருந்தார் என்றால் தற்போது நினைவில்லை. ம.சா.ஆ.8 ஆவணத்தின்படி என் கணவர் 16-02-2015 முதல் 13-03-2015 வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ம.சா.ஆ.9 ஆவணத்தின்படி மருந்துகள் வாங்கியதற்கான குறிப்புகள் என்று தான் தொகைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்னென்ன மருந்துகள் மருத்துவரின் அறிவுறுத்தலின்பேரில் வாங்கப்பட்டது என்று காண்பிக்க தனித்தனியாக மருந்து சீட்டுகள் மற்றும் மருந்து ரசீதுகள் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். 13-06-2015, 15-06-2015 தேதியிட்ட மருந்து வாங்கியதற்கான குறிப்புகள் தாக்கல் செய்துள்ளேன் அந்த தேதிகளில் அவர் மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகள் வாங்கினார் என்று காண்பிக்க மருத்துவரின் குறிப்பும், மருந்துகளின் ரசீதுகளும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 13-03-2015 தேதிக்கு பின்னிட்டு என் கணவர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்தார் என்று காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் மேற்படி சிகிச்சை எடுத்ததாக தாக்கல் செய்துள்ள மருத்துவ ரசீதுகளின்படி தொகை எதுவும் பெற இயலாது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக மேற்படி ஆவணங்களை தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. என் கணவர் மதுரை கொடிக்குளம் என்ற இடத்தில் தான் காலமானார் என்றால் சரிதான். என் கணவர் விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் தன்மையால்தான் மரணமடைந்தார் என்று கூறுவது தவறு என்றும், அவர் விபத்திற்கு பின்னிட்டு தொடர் சிகிச்சையில் இருந்து வந்தார் என்று காண்பிக்க ஆவணங்கள் தாக்கல்செய்யவில்லை என்பதால் காயத்தினால் இறந்தார் என்று இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் மாதம் ரூ.20 ஆயிரம் சம்பாதித்து வந்தார் என்று காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 5ம் மனுதாரரின் வயதை நான் தவறாக காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுவில் கேட்டுள்ள தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல.